*2019 ஜூலை 2]* [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

*வேண்டுமென்று கொடுத்திருந்தார்கள். இதுவரையில் நாம் எந்த* consent*–ம் கொடுக்கவில்லை. எந்தக் கடிதமும் எழுதவில்லை. அப்படியென்றால், நாம் அந்த நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, கடிதத்தினுடைய அந்த* data*–ஐ, அந்தச் சாராம்சத்தை இந்த அவையிலே நாங்கள் முன் வைக்கின்றோம். தாங்கள் 10 சதவிகிதம் இந்த* open competition*–ல் குறைகிறது என்று சொல்கிறீர்கள். இது எல்லாமே* excess *ஆக கொடுக்கிற* seats*–ஐ பற்றி மட்டும்தான் பேசுகிறோம். ஏற்கெனவே இருக்கிறதென்றால், இந்த ஆண்டே நீங்கள் சொன்னதுபோல், 350* M.B.B.S. *இடங்களை நாம் கூடுதலாகப் பெற்றிருக்கின்றோம். அரசு தன்னுடைய சுய முயற்சியால் மாண்புமிகு முதலமைச்சருடைய நிருவாகத் திறமையால், இந்த ஓராண்டில் மட்டும் 350* M.B.B.S. *இடங்களை இந்த ஆண்டு, இந்த ஆட்சியில் நாம் கூடுதலாகப் பெற்றிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) 508* M.D., M.S. seats*–ஐ இந்த ஓராண்டில் நாங்கள் கூடுதலாகப் பெற்றிருக்கின்றோம். இப்போது, அவர்கள்* additional seats*—ஐ மட்டும் எப்படி* share *செய்வது என்பது குறித்து அவர்கள் சொன்னதை அவையில் முன்வைத்தோம் என்பதை மட்டும் பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம். (குறுக்கீடு)*

## (ஆ) அனைத்து மானியக் கோரிக்கை விவாதங்களிலும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கு பேசுவதற்கு வாய்ப்பு வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. கரி. இராமசாமி, இந்த சப்ஜெக்ட்டா? இல்லை, வேறு* matter*–ஆ? (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சிக்கு எல்லா மானியக் கோரிக்கை விவாதங்களிலும் பேசுவதற்கு இவ்வளவு நாட்களாக வாய்ப்புக் கொடுத்தீர்கள். ஆனால், இந்தக் கூட்டத்தொடரிலே அந்த வாய்ப்பைக் குறைத்திருக்கிறீர்கள். நாங்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பாக, தமிழகத்தில் இருக்கக்கூடிய அத்தனை பிரச்சினைகளையும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு இது ஒரு வழி. எனவே, நீங்கள் சொல்லியிருக்கக்கூடிய முடிவை மறு பரிசீலனை செய்து, எங்களது சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லா மானியக் கோரிக்கை விவாதங்களிலும் கலந்துகொள்வதற்கு உரிய உத்தரவை நீங்கள் பிறப்பிக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எல்லோரும் சேர்ந்துதான் அவையை பிற்பகல் 2–30 மணிக்குள் முடிக்க வேண்டுமென்ற கருத்தைச் சொல்லி அன்றைக்கு பேசினோம். உறுப்பினர்கள் பேசியதன் அடிப்படையிலேதான், நீங்கள் 12 மானியக் கோரிக்கை விவாதங்களில் பேசலாம் என்று நாம் அன்றைக்கு ஒத்துக்கொண்டோம். இன்றைக்கு நீங்கள் எல்லோரும் வற்புறுத்துகிற காரணத்தினால் நான் அதை மறு பரிசீலனை செய்து, உங்களுக்கு எல்லா நாளும் வாய்ப்புத் தருகிறேன். ஆனால், எல்லா நாளும் பேசுவதற்கு வாய்ப்பு தருகிறேன் என்று சொல்லி, உங்களுடைய உறுப்பினர்கள் நான் அனுமதிக்கிறபோது, ½ மணி நேரம், ¾ மணி நேரம் என்று அவையினுடைய நேரத்தை எடுத்துக்கொண்டால் என்னால் எதுவும் செய்ய முடியாது. காங்கிரஸ் கட்சிக்கு தினமும் 15 நிமிடங்கள் மட்டும் வாய்ப்பு அளிக்கிறேன். அதை நீங்கள் பயன்படுத்தி, இந்த அவையிலே உங்களுடைய கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாளையிலிருந்து அந்த வாய்ப்பு வழங்கப்படும். இன்றே அது அமலுக்கு வந்துவிட்டது. (குறுக்கீடு)

## 3. வினாக்கள்-விடைகள் நேரத்தை குறித்த நேரத்தில் முடித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இதற்கு முன்னால் எல்லாம் என்ன செய்வார்களென்றால், கேள்வி நேரம் one hour தான். அந்த one hour ஆனவுடன் சபாநாயகர் அப்போதெல்லாம் 'மற்ற கேள்விகள் நாளைய தினம் எடுத்துக்கொள்ளப்படும்' என்று சொல்லி அப்படியே postpone செய்து correct ஆக அந்த one hour–ல் முடித்துவிடுவார்கள். அதனால் நமக்கு time save ஆகும். நீங்கள், 'அவையின் அனுமதியோடு' என்று எங்களைக் கேட்காமலே, வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது என்று நாங்கள் என்னமோ உங்களுக்கு permission கொடுத்ததுமாதிரி, 'நீட்டிக்கப்படுகிறது, நீட்டிக்கப்படுகிறது' என்று சொல்கிறீர்கள். எனவே, கேள்வி நேரம் one hour ஆகிவிட்டால் டமால் என்று bell அடித்துவிடுங்கள். அப்படி அடித்து முடித்தால், அவ்வளவுதான். Correct ஆக இருக்கும் பாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.